# அம்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 564/2012 RCOP.No.

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.R.இளங்கோ என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2019ம் ஆண்டு ஜனவரி திங்கள் 02-ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

வா.சா.1 02/01/2019

பெயர் - சாமந்தி தந்தை/கணவர் பெயர்

தொழில் வயது

இனம் சமயம்

கிராமம் வட்டம்

<u>முதல் விசாரணை</u> :- நான் இவ்வழக்கின் முதல் வாதி ஆவேன். இவ்வழக்கில் நான் எனக்காவும் இதர வாதிகளுக்காகவும் சாட்சியம் அளிக்கிறேன். எனது பக்க முதல் விசாரணையை நிருபண பிரமாண பத்திரிக்கையாக தாக்கல் செய்கின்றேன். நான்கு புகைப்படங்கள் குறுந்தகவலுடன் கூடியது வா.சா.ஆ.1 ஆகும். எனது பெயரில் உள்ள இரண்டு மின் பயணீட்டு கட்டண அட்டையின் அசல் வா.சா.ஆ.2 ஆகும். சம்பந்தி என்பவரின் பெயரில் செலுத்தப்பட்டுள்ள இரண்டு மின் கட்டண ரசீதுகளின் அசல் வா.சா.ஆ.3 ஆகும். (வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணங்கள் தாவா சொத்துக்குரியது அல்ல என்றும் அதற்கு பக்கத்தில் உள்ள சொத்துக்குரியது என்றும் அதன் காரணமாக 2ம் பிரதிவாதியின் தரப்பில் தெரிவிக்கப்பட்ட ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்படுகிறது)

(மேலும் சில ஆவணங்கள் குறியீடு செய்வதற்கு வேண்டி வாதியின் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிற)